# வந்தவாசி நகரமன்றக் கூட்டம்
## சாதாரணக் கூட்ட அறிவிப்பு

31.03.2020–ம் தேதி செவ்வாய்கிழமை மாலை 2.00 மணிக்கு நடைபெற்ற வந்தவாசி நகரமன்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்.

**முன்னிலை : ச.பார்த்தசாரதி,பி,ஏ.,**

தனி அலுவலர் மற்றும் நகராட்சி ஆணையாளர், வந்தவாசி நகராட்சி.

**பொருட்கள்**

**குறள் :**

கற்க கசடற கற்பவை கற்றப்பின்
நிற்க அதற்கு தக.

020. வந்தவாசி நகராட்சியில் (Providing Body Fabrication work as per SWM Segregation Purpose for 2 Nos LCV Vehicles) அமைக்கும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் 11.02.2020 தேதியன்று வரப்பெற்ற இரண்டு 2 ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | விலைப்புள்ளி விபர தொகை ரூ. |
|---|---|---|
| 1. | SB & CO Contractor | மதிப்பீட்டைவிட 0.21 % குறைவு |
| 2. | Rajeswari.LNathan Chemicals Traders | மதிப்பீட்டைவிட 0.85 % அதிகம் |

**அலுவலககுறிப்பு–**

1.மன்றம் முடிவு செய்யலாம்.

2.வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் மதிப்பீட்டைவிட 0.21 %குறைவாக வரப்பெற்றுள்ள SB & CO Contractor ஒப்பந்ததாரரின் விலைப்புள்ளியை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

(ந.க.எண்.843 /2020/இ1, நாள்.11.02.2020)

021. வந்தவாசி நகராட்சி பகுதியில் இயங்கிவரும் அம்மா உணவகத்திற்கு அவசர தேவைக்காக இட்லிடோக்கன், சாம்பார் டோக்கள், தயிர்சாதம் டோக்கன் மொத்தம் மூன்று இலட்சம் டோக்கன்கள் அச்சடித்து விநியோகம் செய்துள்ள NAPCO PRINT வேலூர் நிறுவனத்திற்கு பட்டியல் தொகை ரூ.74,340/–(எழுபத்து நான்காயிரத்து முந்நூற்று நாற்பது மட்டும்) வழங்க தோராய செலவு ரூ.75,000/–க்கு அனுமதிக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு–**

1.மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 891/2015/எப்1, நாள்.18.02.2020)

022.வந்தவாசி நகராட்சியில் 1 முதல் 24 வார்டுகளில் COVID–19 தடுப்பு நடவடிக்கையாக கிருமி நாசினி தெளிக்கும் பணி அனைத்து வார்டுகளிலும் மேற்கொள்ளவேண்டும். என மாவட்ட ஆட்சித்தலைவர் திருவண்ணாமலை அவர்கள் 31.03.2020–ல் நேரடி ஆய்வின் போது தெரிவித்துள்ளதின் பேரில் 10 எண்ணிக்கையிலான டிராக்டர் மூலம் அனைத்து வார்டுகளிலும் கிருமி நாசினி தெளிக்க சோடியம் ஹைப்போ குளோரின் Sodium hypochlorite 7000 லிட்டர் சப்ளை வாங்கி கொள்ளவும், தோராய செலவினம் ரூ.3.00 (மூன்று இலட்சத்திற்கு), அதை அரசு அங்கீகாரம் பெற்ற கூட்டுறவு நிறுவனமான M/S.Sruthi Alum Industry, No.488, Balaiji Nagar, 3rd Street, Ambathur, Chennai என்ற நிறுவனத்தில் வாங்கி கொள்ளவும் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு–**

1.மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

(ந.க.எண். 0706/2020/எச்1, நாள்.31.03.2020)

023. பொதுசுகாதாரம் வந்தவாசி நகராட்சி பொதுசுகாதார பிரிவின் மூலம் கொரோனா வைரஸ் பரவாமல் தடுக்கும் வண்ணம் கிருமி நாசினிகளான லைசால் 2.5% , Pressare Sprayer and Hand Sprayer அவசரம் அவசியம் கருதி அதை அரசு அங்கீகாரம் பெற்ற கூட்டுறவு நிறுவனமான ராஜேஸ்வரி எல்.நாதன் மற்றும் கெமிக்கல் சென்னை என்ற நிறுவனத்தில் வாங்கி கொள்ளவும் அதற்கான தோராய செலவினம் ரூ.5.00 (ஐந்து இலட்சம்) மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு–</u>

1.மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

(ந.க.எண். 0706/2020/எச்1, நாள்.28.03.2020)

024. வந்தவாசி நகராட்சிப்பகுதியில் வாழ்ந்து வருகின்ற ஆதரவற்ற ஏழைகள், முதியோர்கள், தினக்கூலி தொழிலாளர்கள், போன்ற நபர்களுக்கு கோவிட்–19, தடுப்பு நடவடிக்கையின் ஒரு பகுதியான உணவு நிவாரணம் வழங்க மாவட்ட ஆட்சியர் அவர்கள் உத்திரவிட்டுள்ளார்கள். மேற்படி வகையிலான 500 நபர்கள் நகர் முழுவதும் கண்டறியப்பட்டுள்ளனர். இவர்களுக்கு தனியார் உணவு தயாரிப்பாளர் மூலம் மூன்று வேலை உணவு தயாரித்து பொட்டலமாக பேக் செய்து, அவர்கள் வாழும் பகுதியில் நேரடியாக சென்று வழங்க (28.03.2020 முதல் மாவட்ட ஆட்சியரின் மறு உத்திரவு வரும் வரை) மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு–</u>

1.பார்வை–1– மாவட்ட ஆட்சித்தலைவர் திருவண்ணாமலை அவர்களின்
செ.மு.க. ந.க.எண்.DM1/8160/2020, நாள்.25.03.2020
பார்வை–2–தமிழ்நாடு அரசு நிதித்துறை கடித எண்.74/JS/MA/ Finance
(Salaries)/ 2020 நாள்.
பார்வையில் கண்ட உத்திரவுகளின் அடிப்படையிலும், மற்றும் நிதிபற்றாக்குறை
ஏற்படின், பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளலாம். எனவே மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 790/2020/TPI, நாள்.26.03.2020)

025.பொதுசுகாதாரம் வந்தவாசி நகராட்சி பொது சுகாதார பிரிவு மூலம் கொரோனா வைரஸ் பரவாமல் தடுக்க வண்ணம் கிருமிநாசினியான சுண்ணாம்பு நீர் மற்றும் பிளீச்சிங் பவுடர் அவசரம் அவசியம் கருதி வாங்கி கொள்ளவும் அதை அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனமான கற்பகம் சூப்பர் மார்கெட், வேலூர் என்ற நிறுவனத்தில் வாங்கி கொள்ளவும் அதற்கான தோராய செலவினம் ரூ.2.00 (இரண்டு இலட்சத்திற்கு) மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு–</u>

1.மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

(ந.க.எண். 0706/2020/எச்1, நாள்.28.03.2020)

025A. வந்தவாசி நகராட்சி வார்டு 1 முதல் 24 வரை டெங்கு நோய் தடுப்பு நடவடிக்கைகள் டெங்கு நோய் பரப்பும் ஆதாரங்களை வேருடன் அழிக்கவும், தொற்று நோய்களை பெருந்தாக்க அளவில் தோன்றா வண்ணம் துரிதபடுத்த டெங்கு நோய் தடுப்பு தற்காலிக மஸ்தூர்களை 10.02.2020 முதல் 30.04.2020 வரை 3 மாத காலங்களுக்கு திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறை ந.க.எண்.4414/2019/பஈ2 நாள்.04.02.2020ன் படி மற்றும் துணை இயக்குநர் சுகாதார பணிகள் செய்யாறு அவர்களின் ந.க.எண்.2833/இ4/2013 நாள்.10.02.2020ன்படியும் இந்நகராட்சி செயல்முறை ந.க.எண்.1530/2020/எச்1, நாள்.10.02.2020ன் படியும் 35 எண்ணிக்கையில் நியமனம் செய்து கொள்ளவும் அதற்கு நபர் ஒன்றுக்கு ரூ.250/– வீதம் நாள் ஒன்றுக்கு கூலி வழங்கிடவும் 3 மாத காலத்திற்கு மொத்தம் ரூ.8 இலட்சத்திற்கு மன்றத்திற்கு அனுமதி வேண்டப்படுகின்றது.

<u>அலுவலககுறிப்பு–</u>

1.மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

(ந.க.எண். 1530/2020/எச்1, நாள்.05.03.2020)